1986 ஏப்ரல் 25]

திருவனந்தபுரம் வரும் ரயில் வண்டிகளை கன்னியாகுமரிவரை நீட்டித்தல்.

563—(*வினா எண். 7606) திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட மாநிலங்களிலிருந்து திருவனந்தபுரம் வந்து திரும்பிச் செல்லும் ரயில்கள் அனைத்தும் குமரிமுனை வரையிலும் வந்து செல்வதற்கு தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) : கல்கத்தா வழியாக பொங்கைகான்-திருவனந்தபுரம் மற்றும் பம்பாய் வழியாக அகமதாபாத்-திருவனந்தபுரம் துரித இரயில் வண்டிகளை கன்னியாகுமரி வரை நீட்டிக்கக் கோரி அதிகாரிகள் மட்டத்தில் முதலமைச்சரிடமிருந்தும் மத்திய அரசிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டன. நாகர்கோயில் கன்னியாகுமரியில் முடிவிடம் மற்றும் பராமரிப்பு வசதி குறைவு காரணமாக தற்போது இவை சாத்தியமில்லை என மைய அரசு அறிவித்துள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற பிப்ரவரி மாதத்தில் நடந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், ஏற்கனவே கன்னியாகுமரியிலிருந்து Jayanthi Janatha, Howrah–Himmatnagar Express, Gauhathi Express and Kerala Express போன்ற நிறைய ரயில்கள் வந்து சென்று கொண்டு இருந்தன, அதை ரயில்வே நிர்வாகம் நிறுத்தி இருக்கிறது சரியல்ல என்பதையும் அதை மீண்டும் அங்கே இருந்து துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் அதைப் பராமரிக்கத் தேவையான வசதி இல்லை என்ற காரணத்தாலே மீண்டும் அந்த ரயில்களை அங்கே கொண்டு வர முடியாது என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அப்படி என்றால், அந்தப் பராமரிப்பு வசதிக்கான இட வசதிகளையும் மற்ற வசதிகளையும் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 26–10–1983 அன்று இந்தப் பிரச்சினை பற்றி மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். அவர்கள் 10–4–1984-லே நமக்கு பதிலை எழுதியிருந்தார்கள். மீண்டும் முதலமைச்சர் மட்டத்திலே, நடவடிக்கை எடுக்க வேண்டும், பராமரிப்புக்கு உண்டான காரி

யம் செய்யப்பட வேண்டும், இடைப்பட்ட காலத்திலே, அந்த வேலை முடிகிற வரை, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அந்தப் பயணிகளுக்கு வசதிகளைச் செய்கின்ற வகையில், ஒதுக்கீடாகச் செய்து தர வேண்டும் என்ற ஏற்பாட்டைச் சொலலி, அதிலே அவர்கள் சில நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 9-50.)

எதிர்காலத்திலே அவர்கள் அநேகமாக டெர்மினக்ஸுக்கும், பராமரிப்புக்கும் உண்டான வேலைகளை செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதிலே பல ரெயில்கள் அங்கே வந்து சென்றிருந்தன. அதற்கான வசதிகளும் அன்றைக்கு இருந்தன. ஆனால் ரெயில்வே டிவிஷனிலுள்ள அதிகாரிகளுக்குள்ளே இருக்கின்ற போட்டிகள் காரணமாகத்தான் இது அங்கே அளிக்கப்படவில்லை என்று பொது மக்களிடம் பேசப்படுகிறது. அப்படியென்றால் அதை மாற்றி, ஏற்கனவே அங்கே வந்து சென்றிருந்த பிரயாணிகளுக்கு வசதி செய்வதற்கு, அதுவும் குறிப்பாக கன்னியாகுமரியை ஒரு உலக சுற்றுலா ஸ்தலமாக மாற்றுவது என்று தமிழக அரசு முடிவு செய்து அதற்காக பல கோடி ரூபாய்களை இன்றைக்கு செலவு செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில் அப்படிப்பட்ட தொடர் ரெயில் போக்குவரத்து இல்லையென்றால் அதனால் கடினமாக பாதிக்கப்படும் என்ற காரணத்தால், கன்னியாகுமரிக்கு ஏற்கனவே வந்து சென்றிருந்த ரெயில்களை ஏற்கனவே கன்னியாகுமரியிலிருந்து தொடங்கப்படும் என்று ரெயில்வே நிர்வாகம் அறிவிக்கப்பட்டு ரெயில்களும் அங்கிருந்து கிளம்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற நிலைமை அங்கே இருக்குமேயானால் அது பற்றி தனியாக, அவர்களுடைய விளக்கமான கடிதத்தைத் தருவாரேயானால், அதையே அடிப்படையாக வைத்து, அந்தத் துறைக்கும், மத்திய அரசுக்கும் எழுதி அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

சத்துணவுக் கூடங்களுக்கு அருகில் காய்கறித் தோட்டம்.

192—(*வினா எண். 5106 (திரு. யு.பி. மாதையன்), திரு. ச. பாலகிருஷ்ணன், டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் புறங்களில் உள்ள சத்துணவுக் கூடங்களுக்கு அருகாமையில் காய்கறித் தோட்டங்களை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : இல்லை.